# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## *2016 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீடு (திருத்தச்) சட்டம்*

---

*(2016 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 07 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

2016, நவெம்பர் மாதம் 11 ஆம் திகதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 9.00** **தபாற் செலவு : ரூபா 10.00**

## ***2016 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீடு (திருத்தச்) சட்டம்***

*[2016 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 07 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது]*

*ச. வ. ஓ. 15/2016*

### ***2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்***

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-*

*சுருக்கப்பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.*

***1.*** *இச்சட்டம், 2016 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீடு (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன், 2016 சனவரி 1 ஆந் தேதியன்று நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதலும் வேண்டும்.*

*2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்கச் சட்டத்தின் 3 ஆம் பிரிவினைத் திருத்துதல்.*

***2.*** *(இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இரண்டாயிரத்துப் பதினோராம் ஆண்டின் 18 ஆம் இலக்க, துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் 3 ஆம் பிரிவானது, அதன் (1) ஆம் உட்பிரிவினை நீக்கிவிட்டு அதற்குப்பதிலாக பின்வரும் உட்பிரிவினை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-*

> *"(1) இரண்டாம் பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் பொருளின் ஆகுசெலவு, காப்புறுதி மற்றும் கப்பற் கேழ்வுப் பெறுமதி தொடர்பில் விதிக்கப்பட்டு அறவிடப்படவேண்டிய அறவீடு -*
>
> *(அ) 2011, சனவரி 1 ஆந் தேதியன்று தொடங்குவதும் அத்துடன் 2015, திசெம்பர் 31 ஆந் தேதியன்று முடிவடைவதுமான காலப்பகுதிக்கு 5 சதவீதப் படியும்; அத்துடன்*
>
> *(ஆ) 2016, சனவரி 1 ஆந் தேதியிலிருந்து 7.5 சத வீதப்படியும்*
>
> *கணிப்பிடப்படுதல் வேண்டும்.".*

2-PL 010161 - 961 (2016/08)

செல்லுபடி யாகுதல்.

**3.** இரண்டாயிரத்துப் பதினாறாம் ஆண்டு சனவரி 1 ஆந் தேதி தொடங்குகின்றதும் இச்சட்டம் தொடர்பில் சபாநாயகரின் சான்றுரை புறக்குறிப்பிடப்பட்ட தேதியன்று முடிவடைகின்றதுமான காலப்பகுதியின்போது இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறான அறவீடு சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதி விதிக்கின்றவிடத்து அல்லது சேகரிக்கின்றவிடத்து, அவர் உரிய அதிகாரத்துடன் செயலாற்றியுள்ளதாக அத்துடன் செயலாற்றிக்கொண்டிருப்பதாக கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய விதிப்பனவு அல்லது சேகரிப்பு எல்லா நோக்கங்களுக்குமாக செல்லுபடியான முறையில் செய்யப்பட்டிருப்பதாக அத்துடன் செய்யப்படவிருப்பதாக கருதப்படுதலும் வேண்டும். சுங்கப்பணிப்பாளர் தலைமையதிபதி அத்தகைய விதிப்பனவு அல்லது சேகரிப்பு தொடர்பில் எல்லா குடியியல், குற்றவியல் வழக்குகளுக்கும் எதிராக இத்தால் நட்டோத்தரவாதம் அளிக்கப்படுகின்றார்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**4.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும்பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்